## மே– 17 – வெள்ளி

### ஆண்டவரே, எழுந்தருளும்: என் கடவுளே, என்னை மீட்டருளும்: திபா. 3:7

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி 13 : 26 – 33

அந்நாட்களில் பவுல் பிசிதியாவிலுள்ள அந்தியோக்கியாவுக்கு வந்த போது, அவர் தொழுகைக்கூடத்தில் கூறியது, சகோதரரே, ஆபிரகாமின் வழிவந்த மக்களே, இங்கு இருப்போருள் கடவுளுக்கு அஞ்சி நடப்போரே, இந்த மீட்புச்செய்தி நமக்குத்தான் அனுப்பப்பட்டுள்ளது. எருசலேமில் குடியிருக்கும் மக்களும் அவர்களுடைய தலைவர்களும் அம்மீட்பரை அறியவில்லை ஓய்வுநாள்தோறும் வாசிக்கப்படும் இறைவாக்கினரின் வார்த்தைகளைக் கேட்டும் அவற்றைப் புரிந்து கொள்ளவில்லை. ஆயினும் அவருக்கு அவர்கள் தீர்ப்பளித்தபோது அவ்வார்த்தைகள் நிறைவேறின. சாவுக்குரிய காரணம் எதுவும் அவரிடம் இல்லாதிருந்தும், அவரைக் கொல்ல அவர்கள் பிலாத்திடம் கேட்டார்கள். மறைநூலில் அவரைப்பற்றி எழுதியுள்ள அனைத்தையும் அவர்கள் செய்து முடித்தார்கள். பின்பு அவரைச் சிலுவையிலிருந்து இறக்கிக் கல்லறையில் வைத்தார்கள்.ஆனால் இறந்த அவரைக் கடவுள் உயிரோடு எழுப்பினார்.அவர் கலிலேயாவிலிருந்து தம்முடன் எருசலேம் வந்தவர்களுக்குப் பல நாள்கள்தோன்றினார். அவர்கள் இப்போது அவர்தம் சாட்சிகளாக மக்கள் முன் விளங்குகின்றார்கள்.இயேசுவைக் கடவுள் உயிர்த்தெழச் செய்ததன் வழியாக மூதாதையருக்கு அளித்த வாக்குறுதியை அவர்கள் பிள்ளைகளாகிய நமக்கென நிறைவேற்றினார். இதுவே நாங்கள் உங்களுக்கு அறிவிக்கும் நற்செய்தி. இதுபற்றி இரண்டாம் திருப்பாடலில், ”நீரே என் மகன், இன்று நான் உம்மை ஈன்றெடுத்தேன்” என்று எழுதப்பட்டுள்ளது.

**பதில்பாடல் :** நீரே என் மைந்தர் இன்றே உம்மைப் பெற்றெடுத்தேன்.

### நற்செய்தி : யோவான் 14 : 1 – 6

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது: ”நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம். கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். என்னிடமும் நம்பிக்கை கொள்ளுங்கள்.தந்தை வாழும் இடத்தில் உறைவிடங்கள் பல உள்ளன. அப்படி இல்லையெனில், ”உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்யப்போகிறேன்” என்று சொல்லியிருப்பேனா?நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்தபின் திரும்பிவந்து உங்களை என்னிடம் அழைத்துக்கொள்வேன். அப்போது நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள்.நான் போகுமிடத்துக்கு வழி உங்களுக்குத் தெரியும்” என்றார்.தோமா அவரிடம், ”ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர் என்றே எங்களுக்குத் தெரியாது. அப்படியிருக்க நீர் போகுமிடத்துக்கான வழியை நாங்கள் எப்படித் தெரிந்துகொள்ள இயலும்?” என்றார்.இயேசு அவரிடம், ”வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை“ என்றார்.

**தியானம்:** “உள்ளம் கலங்க வேண்டாம்” இயேசு தன்னுடைய சீடர்களைப் பக்குவப்படுத்துகிற ஒரு அருமையான செய்தி இன்றைய நற்செய்தியில் நமக்குத் தரப்பட்டுள்ளது. மூன்றாண்டுகள் இயேசுவோடு தங்கியிருந்து, இயேசுவின் புதுமைகளையும், அருங்குறிகளையும் கண்டு மகிழ்ந்து, அப்பங்களை வயிறார உண்டு, மக்களின் ஏகோபித்த ஆதரவைப்பெற்றவர்களுக்கு இயேசுவின் செய்தி கலக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அப்படிப்பட்ட கலக்கமான துன்பமான நேரத்தில், கடவுள் மீது முழுமையான நம்பிக்கையை வைப்பதற்கு இயேசு அழைப்புவிடுக்கிறார். எனவேதான், வேதனையான, வருத்தமான நேரத்தில் உள்ளம் கலங்க வேண்டாம் என்ற ஆறுதல் செய்தியைத் தருகிறார். திருப்பாடல்27: 13ல் பார்க்கிறோம்: “வாழ்வோரின் நாட்டினிலே ஆண்டவரின் நலன்களைக் காண்பேன் என்று நான் இன்னும் நம்புகின்றேன்”. எவ்வளவு துயரங்கள், வருத்தங்கள் இருந்தாலும், இன்னும் கடவுள் மீது முழுமையான நம்பிக்கையை வைத்திருக்கிறேன் என்கிற செய்தி இங்கே நமக்குத்தரப்படுகிறது. திருப்பாடல் 141: 8 சொல்கிறது: “ஏனெனில், என் தலைவராகிய ஆண்டவரே! என் கண்கள் உம்மை நோக்கியே இருக்கின்றன: உம்மிடம் அடைக்கலம் புகுகின்றேன்: என் உயிரை அழியவிடாதேயும்”. கடவுள் மீது திருப்பாடல் ஆசிரியர் வைத்திருக்கிற நம்பிக்கை இங்கே வெளிப்படுகிறது. மேற்கண்ட இரண்டு திருப்பாடல் வார்த்தைகளும் கடவுள் மீது எத்தகையச் சூழ்நிலையிலும் நம்பிக்கை இழக்காமல் இருக்கும் செய்தியைத் தருகிறது. வாழ்க்கையில் சிலவேளைகளில், நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை என்றாலும், நிரூபிக்க முடியவில்லை என்றாலும், நாம் நம்பித்தான் ஆகவேண்டும் என்ற கட்டாயத்திற்கு தள்ளப்படுகிறோம். நமக்கு நம்புவதற்கு காரணங்கள் இல்லையென்றாலும், கடவுளை நம்புவதுதான் உண்மையான நம்பிக்கை. நம்பிக்கையின் ஆணிவேராக இருப்பது கடவுளன்பு. கடவுள் என்னை அன்பு செய்கிறார் என்ற எண்ணமே, நமக்கு புதிய உணர்வைத்தர வேண்டும். கலக்கமில்லாமல், பயப்படாமல் வாழ்வதற்கு உந்துசக்தியாக இருக்க வேண்டும். அத்தகையதொரு படிப்பினையை இயேசு தனது சீடர்களுக்கு கற்றுத்தருகிறார். நம்மையும் கற்றுக்கொள்ள அழைக்கிறார்.